# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 30-11-2023 வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சி கருங்கல் சாலையில் அமைந்துள்ள MCC வளாகத்தில் (நுண்ணுயிர் உரக்கிடங்கு) உள்ள சுற்றுசுவர் இடிந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. மேற்கண்ட இடத்தில் சுற்றுசுவர் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2975/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.715 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சியில் நகர்மன்ற தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் நிறுத்துவதற்கு வசதி செய்யவும், மேலும் நுழைவு வாயில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், தாய்மார்கள் பாலூட்டும் அறை பழுதுபார்க்கவும் ரூ.4.20 இலட்சம் மதிப்பீட்டில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 23-11-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருமதி.P. சரோஜா | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.வி. பாலகிருஷ்ணன் | 0.58% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.10% குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2615/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.716 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.3

கன்னியாகுமரி மாவட்டத்தில் “குப்பையில்லா குமரி” என்ற தலைப்பில் தமிழக அரசின் திட்டத்தில் சர்வே செய்து கழிவுநீர் செல்ல உறிஞ்சுகுழி அமைக்கப்பட்டதை ஆய்வு செய்து காலக்கெடு முடிந்த வீடுகளின் கழிவுநீர் குழாயை நிரந்தரமாக அடைக்க உத்தேச செலவினமாக ரூ.3.00 இலட்சம் தயாரிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.644, நாள் 29-09-2023-ன்படி மன்றம்

ஒப்புதல் அளிக்கப்பட்டது. 23-11-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. வரப்பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருமதி.P. சரோஜா | 0.13% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.வி. பாலகிருஷ்ணன் | 1.35% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.13% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2541/2023/H1.

மன்றத்தீர்மான எண்.717 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.4

குழித்துறை நகராட்சி கருங்கல் சாலையில் வார்டு எண்.20-ல் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து மழைநீர் மற்றும் கழிவுநீர் சாலையில் வழிந்தோடி பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. மேற்கண்ட இடத்தில் MCC முதல் நந்தன்காடு சாலை வரை வடிகால் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.9,90,000/- (ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2976/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.718 அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.